தேசீயத் தாளாகப் பதிவு பெற்றது.

வேளாளர்மேமைமாதாம் வெளிவருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலனசபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 15

ஆரம்பம் : விரோதிஞு (1889) ஆவணி மீ 28உ. அச்சகம் : சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அக] யாழ்ப்பாணம்:- சௌமிய ஞூ மாசிமீ கசூ உ வெள்ளிக்கிழமை (27-2-1970) [இலஃசுசு

# மகாசிவராத்திரி விரதமகிமை

## திருக்கேதீஸ்வரத்தில் விசேஷ ஒழுங்குகள்

[குரு லிங்க சங்கம வழிபாட்டில் நிறைவுடையவரும் திருக்கேதீச்சரப் புனருத்தாரண சபை ஆயுள் அங்கத்தவரும் கோயிலபிவிருத்திக்காகச் சென்ற 40 வருட காலமாக உழைத்து வருபவருமாகிய சைவத்தொண்டன் திரு. சு சிவசுப்பிரமணியம் அவர்கள் (கொழும்பு) எதிர்வரும் சிவராத்திரி தினத்தை முன்னிட்டு இக்கட்டுரையை வரைகின்றார்.]



சிவபெருமான் உலகுக்குக்கருத்தா. ஆன்மாக்கள் அஞ்ஞானத்தின் ன்றும் நீங்கி மெய்ஞ்ஞானத்தைப் பெற வேண்டுமென்ற கருணையுடையவர் அக்கருணையே ஆன்மாக்களை அவனை வழிபடத் தூண்டும்.

'அவனருளாலே அவன் றாள்வணங்கி' என மணிக்கவாசகசுவாமிகள் திருவாய் மலர்ந்தருளியதையும் நோக்குவோமாக.

சிவனை வழிபட்டு சிவனுடைய அருளைப்பெறுதற்குரிய விரதங்களுள் சிவராத்திரி சிறந்ததாகும். சிவராத்திரி விரதத்தைப்பற்றிப் பல வரலாறுகள் உள்ளன. ஒரு கற்பாந்த காலத்தில் உலகமெல்லாம் ஒடுங்கின. இராக்காலம் வந்தது அன்றிரவு உமாதேவியார் சிவனை அர்ச்சித்து அருள் பெற்றுரெனக் கூறப்படுகின்றது. அவ்விரவே சிவராத்திரி என்பர்.

இன்னொரு கற்பகாலமுடிவில் பிரமதேவருக்கும் விஷ்ணுமூர்த்திக்கும் இடையில் ஒரு சண்டையுண்டாயிற்று. பிரமதேவன் உலகத்தைத் தான் படைக்கின்றமையினுல் தானே உல

(வளர்ச்சி 4-ஆம் பக்கம்)

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

ஒன்றியிருந்து நினைமின்கள்
உந்தமக் கூனமில்லைக்
கன்றிய காலனைக் காலாற்
கடிந்தான் அடியவற்காச்
சென்று தொழுமின்கள்
தில்லையுட் சிற்றம்பலத்து
நட்டம்
என்று வந்தாயென்னும்
எம்பெருமான்றன்
திருக்குறிப்பே.

திருச்சிற்றம்பலம்
-திருநாவுக்கரசுசுவாமிகள்

திருக்கேதீஸ்வரத்தில்

## சிவராத்திரி விழா

வழமைபோல 6-3-70அன்று கௌரியம்பாள் சமேத கேதீஸ்வரநாதருக்கு நான்கு யாமமும் விசேஷ அபிஷேக ஆராதனைகளும் பக்திப் பாடலும், இசை விருந்தும் சமயச்சொற்பொழிவுகளும் கதாப்பிரசங்கமும் நடைபெறும் 7-3-70 காலை 7-30 மணிக்கு சுவாமி தீர்த்தமாடப் பாலாவிக்கு எழுந்தருளுவர். விசேஷ புகையிரத சேவையும், பஸ்சேவையும் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றன.

X X X

### நாவலர் ஆசிரம மண்டபத்தில்

வழமைபோல யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை ஆதரவில் சிவராத்திரி விழா சபை நாவலர் மண்டபத்தில் நடைபெறும் நான்கு யாமங்களும் நடராஜப் பெருமானுக்குப் பூசையும் சிவபூசா மண்டபத்தில் சிவபூசையும் தமிழ்மறையோதலுடன் கந்தபுராணம் அடிமுடி தேடுபடல புராண படனமும் நிகழும். ——

### பசுபதிச் செட்டியார் ஞாபகம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி முதலிய தாபனங்களை நிறுவுவதற்கு மூலகாரணமாகவிருந்தவரும் திருக்கேதீச்சராலயப் புனருத்தாரணத்துக்கு வித்திட்டவருமாகிய ஸ்ரீமான் மு. பசுபதிச்செட்டியாருடைய ஞாபகமாகச் சென்ற மாசி மகத்திலன்று கேதீஸ்வரப் பெருமானுக்கு விசேஷ அபிஷேகாராதனையும் அடியார்களுக்கு அன்னதானமும் நிகழ்ந்தன

### மகாவலிகங்கைத் திட்டம்

இலங்கை மக்களுக்கு வாழ்வையும் வளத்தையும் அளிக்கக்கூடிய மகாவலிகங்கைத் திட்ட வேலையை பிரதமர் திரு. டட்லி சேனநாயகா அவர்கள் நாளை முற்பகல்9-15 மணிக்குபூசைவழிபாட்டுடன் ஆரம்பித்து வைப்பார்கள். ——

## கச்சியப்பசிவாசாரியார் குருபூசை காஞ்சி குமரகோட்டத்தில் நிகழுவதுபோல இங்கும் நிகழுக.

சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக்குருக்கள், அச்சுவேலி

ஆதிகாலத்திலே புராணங்கள் ஒன்றய், ஒரே தொகையாய் இருந்தன. அனுதி கருத்தாவாகிய சிவபெருமான் அவற்றைத் திருநந்தி தேவருக்கு உபதேசித்தருளினர் நந்திதேவரால் அவை சனற்குமார முனிவருக்கு உபதேசிக்கப்பட்டன. சனற்குமாரமுனிவர் வியாச முனிவருக்கு உபதேசித்தாளினர் வியாசமுனிவர் சூதமுனிவருக்கு உபதேசித்தருளினர் அவர் நைமிசாரணிய முனிவருக்கு உபதேசித்தருளினர். பின்பு முனிவரால் மனிதருக்கும், மனிதரால் மனிதருக்கும் உபதேசிக்கப்பட்டன.

வியாசமுனிவர் தொகைப்பட இருந்த புராணத்தைச் சிவபெருமானுக்குப் பத்துப் புராணங்களும், விஷ்ணுவுக்கு நான்கு புராணங்களும், பிரமாவிற்கு இரண்டு புராணங்களும், சூரியனுக்கு ஒரு புராணமும், அக்கினிக்கு ஒரு புராணமுமாகப் பதினெண் புராணங்களாக வகைப்படுத்தினர்.

பதினெண் புராணங்களுள், சிவபுராணங்கள் பத்தும் மேன்மையுள்ளன; உண்மையே கூறு

(வளர்ச்சி 2- ஆம் பக்கம்)

## திருவள்ளுவ நாயனர்

[திருவள்ளுவர் குருபூசைத் தினத்தன்று யாழ் நாயன்மார்கட்டுச் சைவசமய அபிவிருத்திக் கழகத்தினர் அவ்வூர் ஸ்ரீ இராஜஇராஜேஸ்வரியம்பாள்ஆலயத்தில் கழகத்தலைவர் திரு க சோக்கலிங்கம் அவர்கள் தலைமையில் நடத்திய விரிவுரைக் கூட்டத்தில், மாணவ மாணவியர்களின் பேச்சுகள் பாடல்களும் இடம்பெற்றன வயதுடைய சிறுமி செல்வி ந. யோகதுமாரி திருவள்ளுவரைப்பற்றிப் பேசி சபையோரனைவரையும் மகிழ்வித்தார். இப் பேச்சு அன்று நாவலர்ஆச்சிரமத்தில் நிகழ்ந்தவிழாவிலும் இவரால்பேசப்பெற்றது]

உலகில் விலை மதித்தற்குரிய பொருள் அறிவு அவ்வறிவு நெருப்பில் வேகாது வெள்ளத்தினுல் அழியாது. காற்றினுல் அசைக்க முடியாது. மனிதனுடைய வாழ்வுக்கு உறுதுணையானது அறிவு

அறிவுடையவன் பழியைவிலக்கு நன்மை செய்வான். அவன் பிறருக்கு மனத்தினுலும், வாக்கினுலும் தீமை செய்யான். அவனை உலகம் வணங்கும்.

அத்தகைய பெருமையினையுடைய அறிவை நாம் பெறுதற்கு தமிழ்நாட்டில் இற்றைக்கு .000 ஆண்டுகளுக்கு முன் தோன்றினுர் திருவள்ளுவ நாயனுர் அவர் திருக்குறள் என்னும் நூலை அருளிச் செய்தார். அதில் 1330 குறட்பாக்கள் உள. ஒவ்வொரு குறட்பாடலும் இவ்விரண்டு வரிகளாலானது 133 அதிகாரங்களைக் கொண்டது. ஒரு அதிகாரத்தில் 10 குறள் உள்ளன

இலகுவான உவமானங்களினுல் பெரும் உண்மைகளைக கூறுவார்

அகரம் எழுத்துக்களுக்கு முதலாகவுள்ளது ஒவ்வொரு எழுத்திலும் அகரம் கலந்திருக்கும். அகரத்தைப்போல உலகம் ஆதி பகவனுகிய முதலையுடையது.

"அகர முதல எழுத்
தெல்லாம் ஆதி

(வளர்ச்சி 4- ஆம் பக்கம்)




பாவித்த வெற்றுறைகளைச் சேகரித்து
பரிசு பெறுங்கள்
மில்க்வைற்சோப்தொழிற்சாலை
யாழ்ப்பாணம்.

## இராமேசுவரத்தில் சிவராத்திரி வழிபாடு

### ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் அழைக்கப்பெற்றுள்ளார்கள்

இராமேசுவரத்தில் நிகழவிருக்கும் மஹாசிவராத்திரி விழாவில் சங்கீத கதாப்பிரசங்கம் நிகழ்த்துதற்கு நல்லை. மதுரைத் திருஞானசம்பந்தர் ஆதீனத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகள் அழைக்கப்பெற்றுள்ளார்கள். இவ்வழைப்பினை ஏற்றுக்கொண்டு ஸ்ரீலஸ்ரீ தம்பிரான்சுவாமிகள் விமானமூலம் இன்று (27-2-70) பாரதநாட்டுக்குப் பயணமாகின்றூர்கள். ஆங்கு ஒருமாச காலச் சுற்றுப் பயணத்தில பலதலங்களுக்கும் யாத்திரையை மேற்கொள்ளுவார்கள். இராமேசுவரம், சிவகாசி, தர்மபுரம், மதுரை ஆதிய இடங்களிலும் தம்பிரான் அவர்கள் கதாப்பிரசங்கம் நிகழ்த்துதற்குரிய ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளார்கள். ஆங்கிருந்து இந்தோனேஷியாவுக்கு சுவாமிகளை அழைத்து சங்கீத கதாப்பிரசங்கங்களைச் சயலிக்க ஆங்குள்ள இந்து இயக்கப் பேரவையும், சைவ அன்பர்களும் முயற்சி எடுத்திருக்கின்றூர்கள். நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் வீதிபஜனை உட்பட யாவும் வழமைபோல இனிது நிகழும்.

(நாயன்மார்கட்டு நிருபர்)

# சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சௌமிய ஹு மாசி மீ கசு-௨ வெள்ளிக்கிழமை [1970

## திருவள்ளுவரும் கடவுள்கொள்கையும்

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு"

ஒருவன் காணாத வொருபொருளை அவன் கண்ட ஒரு பொருளினுதவியினால் விளக்குவதே அறிவுடைமையாகும். புலியைக் காணாத ஒரு குழந்தைக்கு அதற்குப் பழக்கமான ஒரு பூனையைக் காட்டி, காட்டில் வாழும் புலி இப் பூனையைப்போல விருக்குமெனவும் ஆனால் புலி பூனையிலும் பார்க்க உருவத்தில பெரிதெனவும் புலியைக் கண்ட ஒருவர் புலியைக் காணாத குழந்தைக்கு விளக்குவது பொருத்தமாகும். திருவள்ளுவநாயனார் முதலதிகாரத்தில் முதல் செய்யுளில் கடவுளுண்மையைத் தாபிக்கின்றனர். அருவமாகவும் ஞானமயமாகவுமுள்ள கடவுள் உலகுக்கு முதல்வரா யிருக்கின்றாரென்பதை மக்கள் பழகியுள்ள அகரத்தின் மூலம் விளக்குகின்றார். அகரமானது ஏனைய எழுத்துக்களுக்கெல்லாம் மூலகாரணமாகவும் உடனாகவும் வேறாகவும் உள்ள இயல்பினதாய் அவற்றை இயக்கி, அவ்வகையில் தலைமை பெற்றிருக்கின்றது அதேபோலக் கடவுளும் உலகுயிர்களுக்கெல்லாம் மூலகாரணமாகியும் உடனாகியும் வேறாகியும் இருந்து அவற்றை இயக்கி (தமது படைத்தலாதி ஐந்தொழிலுக்குட்படுத்தி) ஆளுகின்ற கருத்தாவாகுந் தலைமை வாய்ந்து இருக்கின்றனர். இந்த உவமானத்தை உமாபதிசிவாசாரியரும் தமது திருவருட்பயன் முதலதிகாரத்தில் முதல் பாட்டில் எடுத்தாண்டிருக்கின்றனர்.

"அகர வுயிர்போ லறிவாகி யெங்கும்
நிகரிலிறை நிற்கும் நிறைந்து"

அகரமாகிய உயிரெழுத்து எழுத்துக்களுக்கெல்லாவற்றுக்கும் முதலாகியும் உடனாகியும் வேறாகியும் நின்று அவற்றை இயக்கித் தலைமையானதாயிருக்குந் தன்மைபோல, அறிவு மயமாகியும் தனக்குவமையில்லாதவருமாகிய சங்கரனும உயிர்களும் உலகுக்குமெல்லாம் தலைவராய் எங்கும் நிறைந்து நிற்பர்.

அகர உயிரில்லையாயின் அக்கரங்களில்லையென்ற உவமானத்தை, பிரமமில்லையாயின் உலகில்லையென்ற உண்மையை விளக்க மெய்கண்டதேவர் தமது "ஒன்றென்ற" — என்ற உதாரண வெண்பாவில் எடுத்தாண்டிருக்கின்றனர்,

கடவுளை வழிபடுதலே கல்வியின் பயனாகும் என்பதை இரண்டாம் குறளில் விளக்கியிருக்கின்றனர்.

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின்"

எல்லாக் கலைகளையும் கற்றவர்களுக்கு அக் கல்வியினாலாய பயன் மெய்யுணர்வினையுடைய கடவுளுடைய திருப்பாதங்களை வழிபடுதலாகும.

இக்கால விளைஞர்கள் திருவள்ளுவ நாயனார் உலகுக்கு அளித்த இச் சிறந்த கருத்தினை அநுட்டித்து வாழ்வாங்கு வாழ்வார்களாக.

## கந்தபுராணம் ஓதுவோர் பேறும் பயன்

[ சந்தக் கவிமணி, சி. சின்னையாப் புலவர், கச்சாயூர் ]

நாரண னுடைய னாரம ரேசனு நாட்ரிய
காரண னாகிய வேலிறை யாரளி காணுமிறை
பூரண மாகிய வேளுமை காதை புனைகவிதை
தாரணி மீதெழு ஞாயிறை நேருவ தாகிசமே

சிந்தை வருத்த மடங்கு முடற்பிணி தீருமருள்
மைந்தர் முதற்பல பேர்மிகு வாழுவர் மாநிலமாள்
முந்தை யுறுப்பின ரார்வ மிகுத்திடும் மூதுலகிற்
கந்த புராண நெடுங்கதை யோது கருத்தினர்க்கே.

நல்ல கலைக்குவை ஞான மொழுக்க நயக்குமருஞ்
செல்வ மிகுத்திடு நல்லவர் சேர்க்கை சிறக்குமனை
பல்வள மோங்கு முயர்ந்தநல் லாயுள் பலிக்குமயில்
வல்லவ னார்கதை யோதிய பேர்க்குயர் மாநிலத்தே.

## நல்லூர் — கீரிமலை பஜனை பாதயாத்திரை

எதிரே வரும் 22- ஆம் திகதி (6—3—70) வெள்ளிக்கிழமை மாலை 7 மணிக்கு நல்லூர் பஜனை சபையினர் நல்லூர் முருகப்பெருமான் தேவஸ்தானத்திலிருந்து பாத யாத்திரையை ஆரம்பித்து பருத்தித்துறை வீதி, நாவலர் வீதி, கன்னாதிட்டி வீதி வழியாக வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தை அடைந்து அங்கிருந்து காங்கேசன்துறை வீதிவழியாக அதிகாலை 4 மணிக்கு கீரிமலை நகுலேஸ்வரன் தேவஸ்தானத்தை அடைவார்கள்.

12-வது வருடமாக இப்புனித பாத யாத்திரையை நல்லூர் பஜனை சபையினர் நடாத்துகின்றார்கள். அடியார்கள் யாவரையும் இதில் கலந்து கொள்ளும் வண்ணம் மேற்படி சபையார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## கற்றபின் நிற்க அதற்குத்தக

### நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் திருவள்ளுவர் குருபூசை

"யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை இற்றைக்கு 80 வருடங்களுக்கு முன் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியைத் தாபித்தது. அரசாங்கம் ஷை கல்லூரியை தேசியமயமாக்கி விட்டாலும சபைக்கும் கல்லூரிக்குமிடையில் தெய்வீக உறவு நிலவி வருகின்றது. அந்த உறவை பலப்படுத்தவே ஏம்மை இக் கூட்டத்திற்கு தலைமை வகிக்கச் சபையார் அழைத்தனர் போலும்

"கற்க கசடறக் கற்பவை
கற்றபின் அதற்குத் தக"

ஒருவன் கற்க வேண்டிய நூல்களைப் பழுதறக் கற்க வேண்டும். அங்ஙனம கற்றால் அக் கல்விக்குத்தக அவை சொல்லுகின்ற நெறிக்கண்ணே நிற்கவேண்டும். இதுவே நமது இந்துக் கல்லூரியின் இலட்சியமாகும். இதிலிருந்து யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினருடைய சமய அறிவும் பண்பாடும் புலனாகின்றது" கூறினர்.

23-2-70 திங்கட்கிழமை நாவலர் மண்டபத்தில் நடைபெற்ற திருவள்ளுவநாயனார் குருபூசை விரிவுரைக் கூட்டத்தில் தலைமை வகித்த யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிபர் திரு ந சபாரத்தினம் அவர்கள் இவ்வாறு தம்முடைய முன்னுரையில

"திருவள்ளுவ நாயனாருபசமயமும" என்னும பொருள்பற்றி திரு. ஷண்முக குமரேசன் B. A. அவர்கள் இவ்வாறு நிகழ்த்தியபொழுது "அன்பே சமயத்தின் அத்திவாரம். அன்புடையாருடைய என்பும் பிறர்க்குரியது. அன்பில்லாதவரை அறக் கடவுள் வருத்துவர். 'நான், எனது' அகங்காரமமகாரங்கள் நீக்குவதே சமய வாழ்க்கையின் குறிக்கோள். கசிந்துருகி இறைவன் திருவடிக்கன்பு செய்தலே நல்லறிவையும் நல்ல கதியையும நல்கும். கொல்லாமையையும் கொன்றதைத்தின்னாமையை திருவள்ளுவர் வற்புறுத்தினார் என்றும் கூறினார்.

திரு. க. சிவராமலிங்கம் B. A. அவர்கள் "திருவள்ளுவர் அறனும" என்னு பொருள் பற்றிக் கூறினார்

'அழுக்கா றவாவெகுளி
யின்னாச்சொ னான்கு
மிழுக்கா வியன்ற தறம்"

அழுக்காறு புலன்வழியால் உண்டாகும் அவா பிறலபால் வெகுளியும் கடுஞ்சொல்லுமாகிய நான்கு குற்றங்களையும கடிந்து வாழ்வதே அறம. பிறர் உனக்குத் துன்பஞ் செய்தால் அவர்களுக்குத் திருப்பி நன்மையைச் செய்" எனக் கூறினார்.

செல்வி. ந யோகசூமாரி, செல்வன். சிவதட்சணாமூர்த்தி, செல்வன் பொ. இரகுபதி ஆகிய மாணவ மாணவிகளும சொற்பொழிவாற்றினர்.

## கச்சியப்ப சிவாசாரிய

(1-ம் பக்கத்து வளர்ச்சி)

(1-ம் பக்கத்து வளர்ச்சி)

வன. பல்லாயிரமாண்டுகளுக்கு முன்னுள்ள கதைகளையும், பல்லாயிரமாண்டுகட்குப் பின் வருவனவற்றையும் விரித்துக் கூறுவன சிவபுராணங்கள் பத்தினுள்ளும் நாயகமாய்ச் சிறப்புற்று விளங்குவது கந்தபுராணம். அது தருமம, அர்த்தம் காமம், மோட்சம் ஆகிய நான்கு புருஷார்த்தங்களையும் தரவல்லது. கலிதோஷத்தை நீக்கவல்லது அளவிறந்த சரித்திரங்களைத் தம்மாட்டடக்கியுள்ளது.

"புதுமயிலூர்பரன் புராணத்துற்றிடாச் கதையிலை" என்பது நூலாசிரியர் கூற்று. இவ்விதமான மகிமைகளை உடைமையாற் சிவபுராணங்களுள்ளும் கந்தபுராணமொன்றே சிறந்தது

இக்காந்த புராணம் ஆறு சங்கிதைகளை யுடையது. அவற்றுட் சங்கரசங்கிதைபன்னிரு காண்டங்களையுடையது அவற்றுள் முற்பட்டது சிவரகசிய கண்டம் அது ஏழுகாண்டங்களாக வகுக்கப்பட்டது. நிற்க

காஞ்சிபுரத்திலே குமாரகோட்டத்து அருச்சகரும், குமாரக்கடவுளினுடைய பூரணகிருபையைப் பெற்றவரும் ஆகிய கச்சியப்ப சுவாமிகளைப் பாடும்படி குமாரக் கடவுளால் "திகடசக்கர" என்று அடி எடுத்துக் கொடுக்கக் கச்சியப்பசிவாசாரிய சுவாமிகள் சிவரகசிய கண்டத்துள் உள்ள ஏழு காண்டங்களுள் உற்பத்திகாண்டம், அசுரகாண்டம், மகேந்திர காண்டம் யுத்தகாண்டம், தேவ காண்டம், தக்ஷகாண்டம் என்னும் ஆறு காண்டங்களையும் செந்தமிழில் கந்தபுராணமென்னும் நாமமிட்டு முருகக் கடவுளின் கிருபையால் பாடிமுடித்தார். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் கந்தபுராணத்தைப் பரிசோதித்து அச்சிட்டுதவினார்கள்.

காஞ்சிபுரத்தில் குமாரகோட்டத்திலே தாபிக்கப்பட்டிருக்கும் கச்சியப்பசிவாசாரிய சுவாமிகளினது பிம்பத்துக்கு விசேஷபூசை பண்ணிக் குருபூசைக்கு முதல் மூன்று தினங்களிலும் திருவிழா நடாத்துவர். அங்கே உள்ள சிவாசாரியர் குருபூசைத் தினத்தன்று சேர்ந்து சிவபூசைபண்ணிச் சுவாமிகளுக்கு விசேட பூசையும், குருபூசையும் பண்ணிமுடிப்பார்கள் தரிசிப்பவர்களுக்கு மனவூக்கமும், நல்லானந்தமும் உண்டாகும்.

இங்குள்ள அடியவர்கள் இதனை உணர்ந்துபோலும்இவ்வருடத்தில் நாவலர்பெருமான்கந்தபுராணவாரமெனப்பெயரிட்டுஇவ்வாரத்தில் முதன் மூன்று நாளும் கடவுளாராதனை முதலியவைகளும், நான்காம் நாள் சிவாசாரியர் குருபூசையும், பின்மூன்று நாட்களும் கந்தபுராண ஆராதனை முதலியவைகளும் செய்யும்படி ஆரம்பித்திருக்கிறார்கள்.

செயற்கரிய இவ்வரியசிவதொண்டைத் தொடங்கி நடாத்திவருமடியார்களுக்குப் பூரண ஞானமும், இம்மை, மறுமைப் பயன்களும் கொடுத்தருளுமபடி, இறைவனது ஆறுகுணங்களும் தமக்கு ஆறுமுகங்களாகக் கொண்டருளிய குமாரக் கடவுளுடைய திருவடிகளைத் துதித்து மனமார்ந்த ஆசிசொல்லிப் பாராட்டுகின்றேன்.

## தருமத்தின் பெருமை

2-ஆ பககத்தின் வளர்ச்சி

2-ஆ பககத்தின் வளர்ச்சி

அது இருமையின்பத்தையும் எளிதிற் பயப்பது. அது ஒருமையுடையோர்க்கே எளியது இத்துணைச் சிறப்பினதாகிய தருமத்தை ஓருயிர் செய்யுமாயின் அன்பும் அருளும் உண்டாகும். அவை உண்டாக அவ்வுயிர் சிவபிரானை அடையும்,

கச்சியப்பசிவாசாரியர் திருவடி வாழ்க,

## பேராதனைப் பல்கலைக் கழக இந்து மாணவர் சங்கம்

பேராதனை இலங்கைப் பல்கலைக்கழக இந்துமாணவர் சங்க 1970-71ம ஆணடு உறுப்பினர்களாக பின்வருபவர்கள தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: க. ஜெயபாலன், உப-தலைவர்: க. இரத்தினவேல் இணைச்செயலாளர்கள: செல்வி முனோ வேலுப்பிள்ளை, சி. சிவயோகராஜசிங்கம், பொருளாளர்: செல்வி த. பொன்னுததுரை. இதழாசிரியர்: சி. சோமஸ்கந்தன், நூலாளர்: மு. சிவசிதம்பரம்,

## பதவி உயர்வு

யா/ தம்ப செட்டி மே. மி. த. க. பாடசாலையில் தலைமைத் தமிழாசிரியராக இருந்த் திரு. மு. இராசதுரை வ/ பாவற்குளம் படிவம் 2 இல 1 அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு 1-2-70 முதல் பதவி உயர்த்தப்பட்டார்.

இவர் கடந்த 25 வருடங்களாக இரண்டாந்தரத் தலைமையாசிரியராகக் கடமையாற்றினர் என்பது குறிப்பிடத் தக்கது.

## அடைவு நகை ஏலவிற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, 284-ம் நம்பர் கடையில் திரு கா. ந. இளையதம்பி அவர்களிடம் 1969-ம் ஆண்டு ஜனவரி (தை) மாதம் 1-ம் திகதி (1-1-69) திகதிக்கு முன் வைத்த அடைவு நகைகளில் 19-3-70 திகதிக்கு முன் மீட்கப்படாதவை, 1970-ம் ஆண்டு மார்ச் (பங்குனி) மீ 21-ம் உ (21-3-70) சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் மேற்படி கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
"இராசகிரி" ஏல விற்பனவாளர்.
43, காங்கேசன்துறைவீதி, கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.
யாழ்ப்பாணம். 13-2-70 எம் 421, 20. 27-2-70

## அடைவு நகை ஏலவிற்பனவு விளம்பரம்

கோக்குவில் மேற்கு ஆனைக்கோட்டை ரேட், திரு. பொ. செ. அப்பையா, திரு. செ வீ. கனகசபை ஆகிய இவர்களிடம் 1-1-69 திகதிக்கு முன் வைத்த அடைவு நகைகளில் மீட்கப்படாதவை 1970-ம் ஆண்டு மார்ச் (பங்குனி) மீ 11-ம் திகதி (11-3-70) புதன்கிழமை முறையே ஒன்பது, பத்து மணிதொடக்கம் தொடர்ச்சியாக அவரவர் அடைவு கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
"இராச கிரி" ஏலவிற்பனவாளரும் கோட்கொமிஷனரும்
643 காங்கேசன்துறைவீதி Commissioner Sales & Valuer
யாழ்ப்பாணம். 13-2-70 எம 423 20, 27-2-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

(1) N. T. சிவஞானமும் மனைவி (2) புவனேஸ்வரி சிவஞானமும் இருவரும் யாழ்ப்பாணம். —வழக்காளிகள்
இல M B 7834 எதிராக
(1) இளையதம்பி கைம்பெண் மீனாட்சிப்பிள்ளை வண்ணார்பண்ணை கிழக்கு, யாழ்ப்பாணம்.
(2) குலந்தவேலு கதிரவேலு பெரியகடை, யாழ்ப்பாணம்.
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் M. B. 7834-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1970-ஆம் ஆண்டு ஏப்பிரல் மீ 3-ம் திகதி (3-4-70) வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபாய் 2905/-ம் 24-11-1965 தொடக்கம் 12-4-1967 வரைக்கும் ரூபா 1500/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டு செலவு ரூபா 427-95 சதம். அதாவது ஏற்பட்ட செலவு ரூபா 303 சதம் 90 வெலியாத்துச் செலவு 63/- இனிமேல் ஏற்படும் செலவு ரூபா 61. சதம் 05

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் தீவுப்பற்று கருதி புங்குடுதீவு கோவிற்பற்று புங்குடுதீவு மேற்கு இறை வண்ணாச்சிகாடு, மாப்பு. நிலம் லாச்சம் 19½. இதில் செரியலாய் நிலம் லாச்சம் 10 உறுதியின்படி எல்லை கிழக்கு நாகநாதன் கைம்பெண் தெய்வானையின் உடையதும் பங்காளருடையதும் ஆதனம். வடக்கு நாகநாதன் கைம்பெண் தெய்வானையுடைய ஆதனமும், ஒழுங்கையும், மேற்கு ஒழுங்கை, தெற்கு சின்னத்தம்பி வேலுப்பிள்ளையினுடையதும் பங்காளருடையதும் நாகநாதன் கைம்பெண் தெய்வானையுடையதும் பங்காளர்களினுடையதும் ஆதனங்கள். பதிவு இலக்கம் யாழ்ப்பாணம். C. 299/46

107, பெரியதெரு, எ பி.பி. எதிர்மன்னசிங்கம்
யாழ்ப்பாணம், வெந்திஸ் கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
எம். 422 20—2—70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
காரைநகர் கிழக்கு தற்சமயம் கோலாலம்பூர்.
1. காசிநாதர் சின்னத்தம்பி தனது அட்டோனி தத்துவ அதிகாரி சுந்தரம்பிள்ளை வேலுப்பிள்ளை சார்பாகவும்
2. காசிநாதர் சின்னத்தம்பி பெண் பொன்னம்மாவு இருவரும் காரைதீவு கிழக்கு —வழக்காளிகள்
M. B. 10373 எதிராக
காரைநகர் கிழக்கு ஏ. ஆர். விநசித்தம்பி கைம்பெண் ருசம்மா —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 10373-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1970-ம் ஆண்டு சித்திரை மீ 7-ம் திகதி (7-4-70) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அந்தக் காணிக்குள் வைத்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபாய் 12380/- இன்னும் ரூபாய் 9000/-த்துக்கு 15-10-68 தொடக்கம் 27-3-69 வரைக்கும் 6 வீத வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 439-12 சதம்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பிரிவு காரைதீவு கோவிற்பற்று காரைதீவிறை "நன்தாவிலும் ஏழுவன்தலையும்" பரப்பு கில. இலா. 17-ம் வடலிகளும் பனைகளும் வீடுகள் கிணறு செய்பயிர் வான்பயிர்களுடன் இதற்கெல்லை கிழக்கு ரோட்டு. வடக்கு ஆறுமுகம் கனகசபைக்கும் கார்த்திகேசு கைம்பெண் வள்ளியம்மைக்குரிய ஆதனங்கள். மேற்கும் தெற்கும் எதிரிக்குரிய ஆதனங்கள்.

167/1, கோவில் வீதி, நா திருமலிங்கம்
நல்லூர் வடக்கு, விலைமதிப்பாளரும் ஏலவிற்பனவாளரும்
யாழ்ப்பாணம். 10-2-70 எம். 418 27-2-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல: M. B. 10441
புன்னாலைக்கட்டுவன் தெற்கு கதிர்காமு சரவணை —வழக்காளி
எதிராக
பலாலி, பூதர் செல்லையா —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 10441-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1970-ம் ஆண்டு பங்குனி மீ 26ஆம் திகதி (26-3-70) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 3825/-ம் 18-11-68 தொடக்கம் 11-5-69 வரைக்கும் ரூபாய் 3000/-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 324-17.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி மயிலிட்டிக் கோவிற்பற்று பலாலி இறை 'நளப்பளை' பரப்பு நில. இலா. 9½ உறுதியின்படி ஆனால் தற்பொழுது அளவின்படி பர. நில. இலா. 11. வான்பயிர் செய்பயிர்களும் கிணற்றில் பங்கும். இதற்கெல்லை கிழக்கு சின்னப்பொடியன் கைம்பெண் வாருத்தைக்குரிய ஆதனம். வடக்கு ஒழுங்கை. மேற்கு கால் அடிப்பாதை (adippadui) தெற்கு நாகுமணி கைம்பெண் பொன்னுவுக்குரிய ஆதனம்.

நா. ஸ்ரீ இரங்கநாதன்
கொமிசனரும் விலைமதிப்பாளரும்
20, பெருமாள்கோவில் வடக்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம்
24-1-70 எம். 428 27-2-70

## பிஸ்கால் விற்பனை

வழக்கு இல: 10139
ரேகுவஸ்ட் நீதிமன்றம்
ஊர்காவற்றுறை
காலம்சென்ற தம்பிராஜா கைம்பெண் மாதுவதிப்பிள்ளை வட்டுக்கோட்டை கிழக்கு —வழக்காளி
1. தம்பிராஜா விநாயகமூர்த்தி வட்டுக்கோட்டை மேற்கு
2. தம்பிராஜா சின்னப்பா திருநெல்வேலி வடக்கு —பதில் வழக்காளிகள்
விரோதமாக
வேலுப்பிள்ளை நீக்கிலாபிள்ளை தாசந்தனை —எதிராளி

மேற்சொல்லிய வழக்கில் கோட்டால் அனுப்பப்பட்ட கட்டளைப்படி 1970-ம் ஆண்டு பங்குனி மாதம் 26-ம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு இதன்கீழ் சொல்லப்பட்ட ஆதனம் அக்காணிக்குள் நின்று பிரசித்த வெந்தியில் விற்கப்படுமென்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

தீர்வைத்தொகை: ரூபா 249/- உடன் ரூபா150/-க்கு 11-7-1932 தொடக்கம் 27-8-1932 வரைக்கும் 12 வீதவருட வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வருட வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 28-07ம் பிஸ்கால் செலவுகளும் பவுண்டேசும் அறவிடப்படும். காணியின் மதிப்பிட்ட பெறுமதி ரூபா 300/-

### காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறை கோவிற்பற்று காரம்பன் இறை அம்பலப்புலம், பனை, வேம்பு, இலுப்பை புளிய மரங்களுடன் நில. பா. 5 க்கு எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு அயித்தியன் அருளுனுக்குரிய ஆதனம், மேற்கு வேதுருப்பிள்ளை நீக்கிலாப்பிள்ளைக்குரிய ஆதனம் தெற்கு கார்த்திகேசு கைம்பெண்ணுக்குரிய ஆதனம். இதடங்கலிற் சொரியலாய் தூவாசி சட்டுநிதி 11-12-26ம் 1040ம் இலக்கத்திற் பதியப்பட்டது.

சி. அ. மகாதேவன்
வடமாகாண பிஸ்காலுக்காக பிஸ்கால் அலுவலகம்.
யாழ்ப்பாணம். 10-2-70
எம். 432 27-2-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
1. S. வேலுப்பிள்ளை ஐயாத்துரையும் மனைவி
2. புவனேஸ்வரியும், நடுவிதுருத்தி வாட் 3. புங்குடுதீவு
இல M B 10151 எதிராக —வழக்காளிகள்
சுப்பையா வைத்திலிங்கம், சங்கத்தைக்கேணி வாட் 3, புங்குடுதீவு. —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின், M. B. 10151-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1970-ஆம் ஆண்டு பங்குனிமாதம் 11-ம் திகதி (11-3-70) புதன்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபாய் 3000/-ம், 16-7-1968 தொடக்கம் 27-5-1969வரைக்கும் ரூபாய் 1500/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 293-25

### ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப் பகுதி, புங்குடுதீவு இறை "சாத்தான் புலம்" (11¾) நிலப்பரப்பு பதினொன்றே முக்காலும் வான்பயிர்களும் எல்லை கிழக்கும் வடக்கும் மாரிமுத்து பெண் முத்துப்பிள்ளையினதும் பங்காளரினதும் ஆதனம், மேற்கு சோமசுந்தரம் பெண் அன்னப்பிள்ளையினதும் பங்காளரினதும் ஆதனம், தெற்கு ஐயம்பிள்ளை பெண் நாகம்மாவினதும் பங்காளரினதும் ஆதனம் இதடங்கலும்.

2. ஷ "சாத்தாம்புலம்" (6¾) நிலப்பரப்பு ஆறே முக்காலும் பனைகளும் எல்லை கிழக்கு இராமநாதன் பெண் நாயகப்பிள்ளையினதும் பங்காளரினதும் ஆதனம், வடக்கு இளையதம்பி இராசையாவினதும் மற்றையோரினதும் ஆதனம். மேற்கும் தெற்கும் மாரிமுத்து பெண் முத்துப்பிள்ளையினதும் பங்காளரினதும் ஆதனம். இதடங்கலும்.

கலைமணி பொ. செல்வக்குமாரசுவாமி
"கலை இல்லம்" கொமிசனரும், விலைமதிப்பாளரும்.
அராலி வடக்கு, வட்டுக்கோட்டை
1970ம் ஆண்டு மாசிமீ 14-ம் திகதி M 417 27-2-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

அருணாசலம் சிவசுப்பிரமணியம், கரந்தன், நீர்வேலி.
வழ. இல. M. B. 7966 எதிராக —வழக்காளி
1. பொன்னையா கந்தசாமியும் பெண்
2. பொன்னம்மா, கரும்பிராய் வடக்கு, கரும்பிராய்.
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B.7966ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுகாணியை 1970-ம் ஆண்டு பங்குனி மீ 28-ம் திகதி (28-3-70) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபாய் 6,370/-ம், 31-1-66 தொடக்கம் 28-9-67 வரைக்கும் ரூபாய் 4,000/-க்கு 9 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 418-95

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப்பகுதி கோப்பாய் கோவிற்பற்று கரும்பிராய் இறை "கேசன்" பர. இலா. 8 வடக்குப் பக்கத்திலுள்ள கிணற்றில் தண்ணீர் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும், தெற்கெல்லையிலுள்ள காணியால் போவதற்கு பாதையும். இதற்கு எல்லை கிழக்கு மயில்வாகனம் கைம்பெண் தங்கத்துக்குரிய ஆதனம், வடக்கு செல்லப்பா மகள் பாக்கியத்துக்குரிய ஆதனம், மேற்கு வடக்கெல்லையிலுள்ள காணிக்கு போவதற்குரிய பாதையும், தெற்கு செல்லப்பா மகள் அன்னம்மாவுக்குரிய ஆதனம். இதடங்கலும் பதிவு இல: K. 213/79

மேற்படி இறை "கூடிசீமா தஞ்சசீமாவும்" மறு பிரிவுகளும் பர. நில இலா. 30 பனை மரங்களும் வான்பயிர் செய்பயிர்களும் இதற்கு எல்லை கிழக்கு ஒழுங்கையும், தன்னித்தம்பி கந்தர் தம்பிஐயாவுக்கும் பெண் சின்னத்தங்கச்சிக்கும் மற்றவர்களுக்குமுரிய ஆதனங்கள். வடக்கு சின்னத்தம்பி அம்பிரட் கார்த்திகேசுவுக்கும் பங்காளருக்கும் வல்லிபுரம் இராசநாயகத்துக்கும் பங்காளருக்குமுரிய ஆதனங்கள். மேற்கு பொன்னம்பலம் நாகலிங்கத்திற்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். தெற்கு ஒழுங்கையும், தன்னித்தம்பி கந்தர் தம்பிஐயாவுக்கும் பெண் சின்னத்தங்கச்சிக்குமுரிய ஆதனம். இதடங்கலும் பிரிபடப்படாத 1/8 பங்கும் அதற்குரியவைகளும் பதிவு இல: 313/90

20, பெருமாள்கோவில் நா. ஸ்ரீஇரங்கநாதன்
வடக்கு ஒழுங்கை. கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்.
யாழ்ப்பாணம். 31-1-70 எம். 429 27-2-70

## அடைவு நகை ஏலவிற்பனவு விளம்பரம்

அரசாங்க உத்தரவுடன் மாப்பாணவூரி காரைநகரில் அடைவு பிடிக்கும் வேலுப்பிள்ளை சண்முகநாதன் அவர்களின் அடைவு கடையில் 1968-ம் ஆண்டு ஆவணி மீ 1-ஆம் திகதி தொடக்கம் 1968-ஆம் ஆண்டு மார்கழி மீ 31-ஆம் திகதி முடிய அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாதிருக்கும் நகைகள் யாவும் என்னால் 1970-ஆம் ஆண்டு பங்குனி மீ 19-ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் பத்து மணி தொடக்கம் ஷ அடைவு கடையில் வைத்துப் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வை. ஏரம்பமூர்த்தி
காரைநகர். 1970-ம் ஆண்டு மாசி மீ 20-ம் திகதி Auctioneer
எம். 430 27-2, 6-3-70 ஏல விற்பனையாளர்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

கந்தையா சின்னத்துரை, புங்குடுதீவு மேற்கு —வழக்காளிகள்

இல: M. B. 5754 எதிராக

1. வைரமுத்து நாகேந்திரமும் அவரது
2. மனைவி வள்ளியம்மை இருவரும்

புங்குடுதீவு கிழக்கு —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B. 5754 ம் இலக்க வழக்கில எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக்காணிகள் 1970-ம் ஞு மார்ச் மாதம் 18-ந் திகதி (18-3-70) புதன்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபாய் 3,250/-ம 17-6-63 தொடக்கம் 10-6-67 வரைக்கும் ரூபாய் 2000/-க்கு 12% வட்டியும் அதன் முழுத்தொகை இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 459-63

ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் தீவுப் பிரிவு, புங்குடுதீவு கோவிற்பற்று புங்குடுதீவு கிழக்கு இறை "நெசசிக காடு" நிலப்பரப்பு 42ம், வான்பயிர்களும் எல்லைகள்: கிழக்கு: பொன்னம்பலத்தின் மனைவி கனகம்மாவினதும், பங்குதாரர்களினதும் மற்றவர்களினதும் ஆதனம், வடக்கும், மேற்கும்:- ஒழுங்கை, தெற்கு:- மனுவேல் ஞானமுத்தனது உரிமை ஆதனமும், பங்குதாரர்களினதும், இவை பிரிக்கப்படாத நிலப்பரப்பு 15ம் குழி $1\frac{1}{2}$ம அதடங்கலும் முழுக்காணியில் 155/432 பிரிக்கப்படாத பங்கும்.

2. மேற்கூறப்பட்டபடி 'பழனினுப்பிட்டி" வயற்பரப்பு 87ம் எல்லைகள் கிழக்கு:- கதிரவேலு கந்தையாவினதும் மற்றவர்களினதும் ஆதனம் மேற்கு:- அம்பலவாணேஸ்வரர் கோவிலுக்கு சேர்ந்ததையும் மற்றவர்களினதும் ஆதனம், தெற்கு:- தாமரையும் ஆறுமுகத்தின் மகள் தனலட்சுமியினதும் பங்குதாரர்களினதும் மற்றவர்களினதும் ஆதனம். இதடங்கலும் பிரிக்கப்படாத $\frac{1}{2}$ பங்கு.

3. மேற்கூறப்பட்ட "இனுப்பிட்டி வயல்" வயற்பரப்பு 138ம் குழி 12ம் இதில் நிலப்பரப்பு 14ம $6\frac{1}{2}$ மத்தியில் எல்லைகள் கிழக்கு:- நாகலிங்கத்தின் மனைவி கனம்மாவினதும் ஆதனம், வடக்கு:- ஒழுங்கை, மேற்கு:- பொன்னையாவினது மனைவி சிவகாமிப்பிள்ளையின் ஆதனம், தெற்கு:- இராமலிங்கம் நாகலிங்கத்தின் ஆதனம் இதில் 1/3 பிரிக்கப்படாத பங்கு.

க, சிவஸ்கந்தா
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்,
மதிப்பாளரும்

நாகேந்திரமடம்,
வட்டுக்கோட்டை. 18-2-70
M. 440, 27—2—70

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டில்

தம்பு கனகநாயகம், மாவிட்டபுரம், தெல்லிப்பளை

இல: M B 9255 எதிராக

1: ஆறுமுகம் கனகசிங்கம்
2. பெண் தயானமணி, எளுவாவுடை, தெல்லிப்பளைகிழக்கு

தெல்லிப்பளை —எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் M B 9255ம் இலக்க வழக்கில் எனக்கு கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்படும் ஆதனங்கள் 1970ம் ஞு சித்திரை மாதம் 5-ம் திகதி (5—4—70) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் அவ்வவ்வாதனங்களுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதலும் வட்டியுமாக ரூபா 7,417/- இன்னும் ரூபா 5000/-திற்கு 19-7-67 தொடக்கம் 27-4-68 வரைக்கும் பத்துவீத வட்டியும் கூட்டிக் கூடிய தொகைக்கு 27-4-68 தொடக்கம் முழுப்பணம் இறுக்கும் வரைக்கும் ஐந்து வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 460-05 சதமும் ஏற்பட்ட செலவு 266-25, வெளியாத்துச் செலவு 91-20 ஆண்மேலேற்படுஞ் செலவு 82-60 இதில் முதலாலும் வட்டியாலும் முறையே 6,500/-ம், 150/- ரூபாவும் போக மிகுதி.

ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்குப் பகுதியும், தெல்லிப்பளைக் கோவிற்பற்று தெல்லிப்பளை கிழக்கிறை "எளுவாவுடையும், கடல் கந்தாளையும்" பர நில. லா. 8 குழி 14, 2/10 எல்லை கிழக்கு வேலுப்பிள்ளை செல்வநாயகத்திற்கும் கூட்டுப்பங்காளருக்கும் வடக்கு முருகேசு நாகலிங்கம், மேற்கு வழிவாய்க்கால், தெற்கு விஸ்வநாதர் சிற்றம்பலத்தினுதனம். இதடங்கலும தெற்கேயிருக்கும் கிணற்றிற் பங்கும்; தூர்வையுருத்தும வழிவாய்க்கால் பாவிப்புருத்தும.

2. ஷெ இறை "எழுவாவுடையும் கடலகந்தாளையும்" பர. நில. லா. 3 குழி 1, 8/10 எல்லை கிழக்கு வழிவாய்க்கால், வடக்கு முருகேசர் செல்லையாவினுதனம, மேற்கு டச்சு ரோட், தெற்கு விசுவநாதர் சிற்றம்பலத்தினுதனமும், தூர்வை நிலமும் இதடங்கலும் வீட்டின் பங்கும, வழிவாய்க்கால் பாவிப்புருத்தும தூர்வையுருத்தும்.

3. ஷெ இறை "எழுவாவுடையும் கடல்கந்தாளையும்" பா. நில. லா. 2 குழி 9, 8/10 எல்லை கிழக்கு வழிவாய்க்கால வடக்கு முருகேசர் செல்லையாவினுதனம், மேற்கு டச்சு ரோட், தெற்கு எதிராளிகளினுதனம். இதடங்கலும் இதற்கு எதற்குக் காணியின் தெற்கிலிருக்கும் கிணற்றுவ பங்கும். தூர்வையுரித்தும்; வழிவாய்க்கால பாவிப்புரித்தும.

தா. க. பொன்னுத்துரை J. P.
கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்

"அகிலகம்"
28/1, யாழ்வீதி, யாழ்ப்பாணம்.
19—2—70
M 439 27-2-70

---

## நாவலர் நல்வாக்கு

அறிவும் நல்லொழுக்கமும் உடையவர்களை நிந்திப்பவர்கள்,
அறிவையும் நல்லொழுக்கத்தையுமே நிந்திக்கிறார்கள்.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல: M B 8145

அருணாசலம் கதிரவேலு

சுழிபுரம் —வழக்காளி

எதிராக

1. செல்லப்பா அருணாசலம்
2. பெண் செம்பகவல்லியும்
3. காலஞ்சென்ற கந்தர் வேலு கைம்பெண் பொன்னு அனைவரும் சுழிபுரம்
4. முருகேசு சிற்றம்பலமும்
5. பெண் வள்ளியம்மை
6. தானுவர் மாமுதது
7. பெண் மாணிக்கம் அனைவரும் சுழிபுரம் மேற்கு சுழிபுரம்

— பதில் எதிராளிகள்

யாழ்ப்பாண டிஸ்திறிக் கோட்டின் M B 8145-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக்காணிகள் 1970 - ஆம் ஞு மார்ச் மீ 21-ம் திகதி (21-3-70) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

